1159

பதிவு எண்—M 3720 வெள்ளிக் கிழமையில குருகுலத் தாள

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் இளவழகனார்.

OFFICE OF THE ... 1 - SEP 1955 MADRAS

1159
3-N

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத ஆவணி கய 26—8—55 தளிர்—47

குருகுலத்தின் குறிக்கோள்

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

உற்ற காவல்

தொடர்ந்த நன்னடத்தை சிற்சில வழுக்குதலில் மாந்தரைக் காத்து உதவுகின்றது. தொடர்ந்த நற்பழக்கமே அவ்வுதவிக்கு ஏது.

உள்ளத்தில் அழுக்காறு அவா, வெகுளி முதலியன எழுகின்றபோது, அவற்றைத் திருத்திக்கொள்ளத் தொடர்ந்த நன்னடத்தையே நோத்தில் உதவும், மக்கள் எவ்வளவு விழிப்பாய் இருந்தாலும், சூழல் முதலிய காரணங்களாலும் வினையின் தாக்குதலாலும் சிற்சில நேரங்களில் மேற்சொன்ன மனமாசுகள் எழக்கூடும். அவற்றின் உந்துதலால் இன்னாச் சொற்களும் தோன்றிவிடலாம். அதற்கு ஒரு தாழ்ப்பாள்போன்றதே ஒழுக்கப்பண்பு என்பது.

பொய், கோள், கடுஞ்சொல், பயனில் சொல் என்னும் நால்வகைச் சொற்களும் தீமை பயப்பன; ஆதலால், அவற்றைத் தீயசொற்கள் என்பது பொருந்தும்.

வாழ்க்கையிற் பல நிலைமைகளால் இத் தீயவற்றைக் கூறும்படி உள்ளம் அழுக்காறு முதலியவற்றால் முந்தலாம். அத்தகைய நெருக்கடியில் மனமே வழுவாமல் இருப்பது நல்லொழுக்கத்திற் பழகியவர்க்கு இயல்புதான். ஒரோஒருகால் மனம் வழுவினாலும் நல்லன சொல்லப் பழகியிருக்கும் வாய் என்பதாவது தீய சொல்வதற்கு மாட்டாமையாய் இருக்கும். அது எது போல என்றால், சிலர் ஒருவர்க்கு ஒன்று உதவுகிறேன் என்று சில நேரங்களில் வாயால் சொல்லி அதனைச் செயலில் செய்யாமல் தயங்குகிறார்களே அது போன்றது! அதனால், ஒரோஒருகால் மனம் வழுக்கினாலும் வாய் தீமை சொல்லுதலில் மாட்டாமையால் பின் வாங்குதல் இயல்பேயாம்.

நல்லொழுக்கம் என்பது மனமும் வாக்கும் செயலும் தொடர்ந்து நல்லனவாய் இருத்தலாம். அவற்றிலும், வாக்குச் செய்கைகளில் தொடர்ந்த நன்னடத்தையின் அழுத்தத்தையே ஒழுக்கம் என்பது சிறப்பாய் உணர்த்தும், இவற்றில் இடைப்பட்டது வாக்காதலின் செயல்வரையில் நன்றாய்ப் பழகியவர்க்கு வாக்கு,தீர்மானமாய்த்தீமைக்கு இடம் தராதாதலின் ‘ஒல்லாவே’ என்று ஆசிரியர் முடிந்த முடிபாய் இரங்கிக் கூறினார்கள். வாயால் சொல்லுதலே மாட்டாமையானபோது, செயலால் தீய செய்தல் சற்றும் இயலாதென்பது தானே பெறப்படும். ஒழுக்கம் என்பது ஆ! மாந்தர்க்குத்தான் எவ்வளவு இயல்பான பாதுகாவலாய் இருக்கின்றது!

ஒழுக்கம் உடைவர்க்
ஒல்லாவே, தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

தீய—தீமை பயக்கும் சொற்களை, வழுக்கியும் வாயால் சொலல்—மறந்தும் தம் நாவினால் சொல்லுதல், ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லா-நன்னடத்தை உடைய நல்லோர்க்கு இயலா.

பயனை ஒட்டி நல்லன வருக்க வேண்டுமாதலின் தீய என்பதற்குத் தீமை பயக்கும் சொற்கள் எனப்பட்டது. வழுக்கியும் என்றது, இங்கே மறந்தும் என்றற்கு. சொல்லுதலை ‘வாயாற் சொலல்’ என்று எடுத்துக் காட்டினார், நல்ல சொற்களே சொல்லிப் பயின்ற வாய் என்று அதன் சிறப்புத் தெரியும் பொருட்டு. ஒருகால் மனத்தால் நினைத்தாலும் உடனே திருத்திகொள்வர், வாயால் வெளியிட மாட்டார் என்னும் கருத்தும் அதனால் பெறப்படும். இக்கருத்திற்கு, வழுக்கியும் என்பதற்கு மனத்தால்தவறியும் என்பதுபொருளாகும். ‘ஒல்லா’ என்னும் சூாலும் இக்கருத்துக்கு ஏற்றதாய்அமைந்திருத்தல் கருதற்பாலது. மனத்தால் தவறியும் வாயால் சொல்லுதல் இயலா என்றபடி.

ஒல்லா என்னும் பன்மை முடிபு பல காலங்களில் சொல்ல நேர்ந்தாலும் அச் சொல்லுதலெல்லாம் என்னும் எழுவாயைக் கொண்டது.

தீய சொல்லுதற்கு நிலைமைகள், நேர்ந்தாலும் ஒழுக்கம் காக்கும் என்றற்கு, ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே என்றார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	மன்மத, ஆவணி,	தளிர்
7	26 8-55 வெள்ளி.	47

தமிழ் செய்த தவப் பயன்

என் நண்பர் ஓர் இலக்கியப் பித்தன். சங்க இலக்கியங்களை அவன் தன் உயிரினும் சிறப்பாய் ஓம்பும் தன்மை படைத்தவன். புறநானூற்றைப் படித்துப் படித்துப்புளகாங்கித மடைவான். தான் கற்ற அரிய உண்மைகளை எனக்கும் கூறி உவகையூட்டுவான். உவப்பத் தலைக்கூடுவதும் உள்ளப்பிரிவதும் எங்கள் தொழிலாய் அமைந்தன. எல்லா இலக்கியங்களையும் போற்றி வரும் என் நண்பன், திருக்குறளை மட்டும் சிறப்பிக்காதது என்னை வியப்பிலாழ்த்திற்று. "என்ன, எழிலன்! உலகமே இன்று வள்ளுவத்தைப் பல்லாற்றானும் எத்திப் புகழ்கின்றது; இலக்கியப்பித்தனாகிய நீ மட்டும் ஏன் திருக்குறளை மற்ற நூல்களை மதிப்பதுபோல் சிறப்பிக்கவில்லை?" என்று உசாவினேன்.

"இரண்டடி; அதிலும் ஒன்றே முக்கால் அடிதான்—அதில் என்ன இலக்கிய நயம் கண்டுவிடுகின்றார்களோ யானறியேன். எனக்கு என்ன காரணத்தாலோ, அதன் மீது நாட்டம் செல்லவில்லை" என்று கூறினான். அவனைத் தக்க சமயத்தில் உண்மை காணும்படிசெய்ய உறுதி பூண்டேன்.

ஓர் நாள் நாங்களிருவரும் மாலை இளந் தென்றலில், கடற்கரையோரத்தில் சிங்கார நடை பயின்றுகொண்டிருந்தோம். அரசியல், வீட்டியல் பற்றியெல்லாம் சென்ற எங்கள் பேச்சு இலக்கியத்தின்பால் திரும்பியது. நல்வாய்ப்பாக, திருக்குறளைப் பற்றி என் நண்பனே பேச ஆரம்பித்தான். 'திருக்குறளில் இல்லாதவை இல்லை' என்றார்களே, என்ன இருக்கிறது?" என்று என்னைக் கடாவினான்.

"எதையும் ஆராய்ந்து பார்த்தால்தான் உண்மை புலனாகும். குறளைப் படியாததனால் நீ இவ்வண்ணம் பேசுகின்றாய். திருக்குறளில் இல்லாதன இல்லை என்பது முக்காலும் உண்மையே" என்றேன்.

உடனே என் நண்பன், உடனே தான் ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்தவன் போல் பரபரப்புக் கொண்டு, "அப்படியாயின், மணி, அதோ தொலைவில் துப்பாக்கி கொண்டு சுடுகிறார்கள், பார்த்தனையா! அத் துப்பாக்கி திருக்குறளில் உள்ளதா? கூறு பார்ப்போம்—இப்போது நன்கு சிக்கிக் கொண்டனை" என்றான்.

வல்வாயனை வல்வாயால்தான் மடக்கவேண்டும். நான் உடனே "ஏன் இல்லை?" துப்பாக்கியைப் பற்றியும் வள்ளுவர் கூறியிருக்கிறார்" என்று கூறி,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்
துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை"

. என்ற குறளைச் சொன்னேன். நண்பண் உண்மையிலேயே பெருவியப்படைந்தான். நான் கூறினேன். துப்பாக்கி என்று இக் குறளில் வரும் சொல், உண்மைத் துப்பாக்கியைக் குறிக்காவிட்டாலும், "துப்பாக்கி" என்று சொல்லளவில் கூறமுடியுமே என்றேன். நண்பன் அடிபட்ட சிங்கம்போல், வெகுண்டெழுந்து எதிரில் கண்டவற்றையெல்லாம் குறித்துச் சரமாரியாகக் கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

அதோ ஒருவர் "இ இ" என்று சிரிக்கிறாரே அது உங்கள் திருக்குறளில் உள்ளதா?" என்றான். நல்ல வேளையாகத் திருக்குறள் எப்போதும்போல் அப்போதும் என் கையிலேயே இருந்தது. நான் "இ இ" என்று வரும் திருக்குறளை,

"இலமென்று அசைஇ இருப்பாரைக்
காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்று ஆதாரத்துடன் விளக்கினேன். உடனே அவன், இப்போது அம் மனிதர் மற்றவரிடம் "ஓ ஓ" என்கிறாரே—அதுவும் இருக்கிறதா? என்று அலட்சியமாய் வினவினான். இவனை நன்கு மட்டம் தட்டவேண்டும் என்று கருதி, "ஏன் இல்லை"?

"ஓ ஓ இனிதே எமக்கிந்நோய்
செய்த கண்
தா அம் இதற்பட் டது"

என்ற குறளில் நீ அதைக் காணலாம் என்று காட்டினேன். அவனுக்கு ஒரே வியப்பாய்விட்டது. இருப்பினும் தன் பிடியை விடாமல், "அதோ தூரத்தில் மொட்டை அடித்துக்கொண்டு ஒரு சாமியார் உட்கார்ந்திருக்கிறாரே, மொட்டையைப் பற்றி வள்ளுவர் கூறியிருக்கிறாரோ?" என்று கடாவி, இது உறுதியாய்க் குறளிலே இருக்காது என்ற நம்பிக்கை கொண்டவன்போல், வெற்றிச் சிரிப்புச் சிரித்தான்.

அவன் சிரிப்பு கொஞ்ச நேரமாவது நீடிக்கட்டும் என்று உள்ளத்திலே உன்னி, நான், சிறிது நேரம் சென்றபின், "எழிலன்! இக் குறளைக் கேள்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா;
உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

"மழித்தல்" என்பது மொட்டையைக் குறிக்கின்றது என்பது வெளிப்படை. இப்போது என்ன கூறுகின்ருய்?" என்று அமைதியுடன் கேட்டேன்.

என்ன, மணி, நான்கேட்டதற்கெல்லாம், இப்படி உடனுக்குடன் விடை கூறி என்னை அடக்கிவிட்டனையே, திருக்குறளில் இல்லாதன இல்லை என்பது உன்னாலேயே உண்மையாகிவிடும்போல் இருக்கிறதே, சரி இப்போது ஒன்றே ஒன்று கூறுகிறேன். உன்னைச் சோதிப்பதற்கு மன்னித்துக் கொள். அதோ தூரத்தில் இரண்டு வெள்ளாடுகள் சண்டை யிடுவதைப் பார்த்தனையா! அவை எவ்வாறு முன்னும் பின்னும் சென்று போரிடுகின்றன. இதைக்கூட வள்ளுவர் கூறியிருக்கிருரா?" என்று கேட்டான்.

"எழிலன், நீ கண்ணுற் காண்பனவெல்லாம் இது உளதா, அது இருக்கிறதா" என்று கேட்கின்றனை. நல் வாய்ப்பாய் அவை குறளிலே இருக்கின்றன. இப்போது கேட்டாயே, அஃதும் குறளிலே இருக்கின்றதப்பா! என்றேன்.

"ஊக்கம் உடையார் ஒடுக்கம்
பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து"

என்ற அருமைக் குறளை நான் கூறியது தான் தாமதம், அவன் உடனே பணிந்து, "நண்பா போதும் போதும்-நிறுத்திக் கொள். குறளில் எல்லாம் உள்ளன என்பது உண்மை-உண்மை-உண்மை. மூர்த்தி சிறிதாயிருந்தாலும் கீர்த்தி பெரியதாயிருக்கிறதே என்ன வியப்பு!" என்று வியப்பும் மகிழ்வும் கலந்த குரலில் உணர்ச்சி பெருகக் கூறினன்.

நேரம் ஆகிவிட்டமை உணர்ந்து நாங்கள் இருவரும் இல்லம்நோக்கி நடைபோட்டோம். எழிலன் என்னைப் பார்த்து, "மணி நீ எனக்கு இன்று நல்ல அறிவு செலுத்தினய் இனி நாடோறும் பத்துக் குறளையாவது மனப் பாடம் செய்து வருவேன். குறளின் பெருமையை இன்றே உணர்ந்தேன்" என்று கூறினன்.

"தமிழ் செய்த தவப் பயனல்லவா? இன்று நாம் குறளைக் கற்றுக் கற்று இன்புறுகிரும்" என்று நான் கூறினேன்.

"தமிழ் செய்த தவப்பயன் தான், தமிழ் செய்த தவப்பயன் தான்" என்று எழிலன் வாய் முணுமுணுத்தது.

—T N. அருச்சுனன்.

திருவாரூர்க் கல்வெட்டுக்கள்

திருமுறைகள்:

திருக்கோயிலில் திருமுறைத் திருப்பணி செய்வார்க்கு இறையிலியாக நிலம் வழுங்கித் திருமுறைகளுக்கு அரசர்கள் தந்த ஆக்கம் மிக நுனித்து இன்புறக் கூடியது. அன்றியும் மூவர்முதலிகளை அவரவர்கள் திருநாட்களில் வழிபட.வும் வகைகள் செய்யப் பெற்றன.

வரலாறுகள்:

நம்பியாரூரர் பிதாமாதாக்கள் சடையனாரும் இசைஞானியாரும் என்பதனையும்; இசைஞானியார் கௌதம கோத்திரரான ஞான சிவாச்சாரியாருடைய புத்திரி என்பதனையும் அறிவிக்கின்ற S I I Vol I V 397-ம் கல்வெட்டு மிகச் சிறந்த கருத்தை அறிவிப்பதாகும். சேக்கிழார் பெரியபுராணத்தில் தடுத்தாட் கொண்ட புராணத்தும் இசைஞானியார் புராணத்தும், 'ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசைஞானியார், என்றும் 'இழியாக்குலத்திசை ஞானி' என்றும் குறிப்பித்தார்களே யன்றி ஊரும், தந்தை பெயரும், கோத்திரமும் குறித்தார்களல்லர். அவைகளைக் கல்வெட்டு விளக்குவது கண்டு மகிழ்தற்குரியது.

அரசர்பெயரும் காலமும் அறியமுடியாத கல்வெட்டு ஒன்று அக்கால மக்களுடைய சாதிப் பாகுபாடுகளையும் அவர்களின் கடமைகளையும் அறிவிக்கிறது. அதில் கௌதமர், நாரதர், யாஸ்கர், யாக்ஞவல்கியர் முதலிய ஸ்மிருதி கர்த்தாக்களுடைய ஞாயங்களை எடுத்துக்காட்டி அநுலோமப் பிரதிலோமருடைய உரிமைகளை அறிவிக்கிறது. சிறப்பாகப் பாரசைவர் என்பவருடைய தீக்ஷைமுறையும், தியாகர் சந்நிதியில் அவர் செய்ய வேண்டிய தொழிலும் அறிவிக்கின்றது.

கலை:

திருக்கோயில்கள் நுண்கலையாகிய இசைக்கும் கூத்திற்கும் முதலிடம் தந்து காப்பாற்றி வந்தன. பூங்கோயில் நம்பி என்பவர் வீராணுக்கவிஜயம் இயற்றியதற்காகப் பாதுகாக்கப்பட்டு வந்தார் என்பதை S. I. I 548-ம் கல்வெட்டு கூறுகிறது 678-ம் கல்வெட்டு இசைபாடுவோர்க்குப் பொன் கொடுத்த செய்தியைக் காட்டுகிறது. நகைகள் செய்யும் கலையைக் காப்பாற்ற ராஜேந்திரன் I. காலத்தில் தந்தி சத்தி விடங்கியாரால் தட்டாரக் கூலியாக நிலம்விடப் பெற்றது. நிலம் பெற்ற தட்டான் இறைபணியைச் சரிவர இயற்றாமையால் அதனைத்திருவாரூர்க்கோயிலொடு மறுபடியும் இணைத்துக் கொண்டார்.

இன்னும் கூத்துவல்லானுகிய பூங்கோயில் நம்பி என்பவனுக்குப் 'பூங்கோயில் நாயகத் தலைக்கோல் என்ற சிறப்புப்பட்டமுங் கொடுத்து இறையிலி நிலமும் வழங்கியிருக்கிருர்கள்.

அரசியல்:

கோயில் காரியங்களில் குற்றம் கண்டால் அதனைக் குழுவில் வைத்து ஆராய்ந்து குற்றத் தண்டனை விதித்தல் மரபு. அரசாங்கத்து பொன்னிறையாக இராஜ

ராஜன் மாடை என்ற ஒன்று வரையறுக்கப் பட்டிருந்தது. அது மூன்று கழஞ்சு ஒரு மஞ்சாடி ஒரு குன்றுமணி எடையுள்ளது. கோயில் நிலங்கட்கும், பூந்தோட்ட நிலங்கட்கும், தட்டாரப்பட்டம் போன்றதான ஊதிய மானியங்கட்கும், இறையிலி செய்யப் பெற்றது. சில பொன் முதலீடுகளை முதல் பெருகுவதற்காக அவ்வூரில் உள்ள பெரிய வியாபாரியிடம் கொடுத்து அவர்களையே அப்பணி செய்யுமாறு பணித்தது மிகவும் ஊன்றி அறிந்து இன்புறத்தக்க நிகழ்ச்சிகளுள் ஒன்றும், பணப் பெருக்கம் வியாபாரத்தாலன்றிப் பெருகாது என்பதை உணர்ந்து, கோயிலுக்காக ஒதுக்கப்படும் அரசாங்க முதலீட்டை அவர்களிடம் கொடுத்து வியாபாரப் பெருக்கமும் பொருளாதாரப் பெருக்கமும், அறப்பாது காப்பும் செய்து கொண்ட சோழ மன்னர்களின் நுண்மதி மிகவும் பாராட்டத் தக்க தொன்றும். இதனை II ம் ராஜேந்திரனுடைய 8-ம் ஆண்டில் உய்யக் கொண்ட வளநாட்டு அம்பர் நாட்டுப் புறக்குடி புறக்கடையான் சுற்றி ஆதித்தனான சோழவிச்சாதர விழுப்பரையான் கோயிலில் இசை பாடுவோர்க்கும் பணியாளர்க்கும் கோயில் எண்ணெய்க்குமாகத் திருவாரூர் வணிகர்களிடத்தில் பொன் கொடுத்தான் என்ற கல்வெட்டுப் பகுதி சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சோழமன்னர்கள்:

தமிழ்நாட்டு மூவேந்தர்களில், நாட்டில் தமிழை வளர்த்தவர்கள் பாண்டியர்கள்; தெய்வத்தன்மையை வளர்த்தவர்கள் சோழர்கள்; வீரத்தை வளர்த்தவர்கள் சேரர்கள் என்பதை வரலாற்றுசிரியர் அனைவரும் ஒப்புவர். அங்ஙனமாகிய தெய்வச் சோழர்களில், வீதிவிடங்கப் பெருமானிடத்து என்றும் நீங்கா அன்பு பூண்டவர்கள் பலரிருந்தனர் எனக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அவர்களில் காலத்தாலும், பணியாலும் முற்பட்டவன் முதற் பாராந்தகனே.

பராந்தகன் 1

இவன் ஆதித்த சோழமன்னன் மகன். கி. பி. 907-ல் முடிசூடியவன். இவ்வரசனுக்கு வீரநாராயணன் என்னும் மறுபெயரும் உண்டு. எண்ணெய்க் காப்பு மண்டபம் என்னும் ராஜநாராயண மண்டபமும் இவன் கட்டியதாதல் வேண்டும். ஆனால் பெயர் ஒற்றுமை தவிர அதற்குத் தக்க ஆதாரம் எதுவும் கிடைத்திலது. இவன் மதுரை கொண்ட கோப்பர கேசரி என்றே குறிக்கப்பெறுவான். இவனுடைய ஆட்சி முப்பத்திரண்டாவது ஆண்டில் திருவாரூர்ப் பூங்கோயிலுக்கு விளக்கிடப் பொன்வழங்கினான்.

இராஜராஜன் I

—கி. பி. 985–1014.

மதுராந்தகன் அரசுபுரியுங் காலத்திலேயே இளவரசுப்பட்டம் ஏற்றவன். இரண்டாம் பராந்தகன் மகன். கடற்போரிலும் வல்லவன். அமரபுஜங்க பாண்டியனை வென்று மதுரையைப் பிடித்தவன். இன்று சைவவுலகத்தை – திருக்கோயில்களை தெய்வத்தீந்தமிழைக் காத்து வரும் திருமுறைகளைத் தேடிக் கண்டவன் இவனே. அதனாலே திருமுறை கண்ட சோழன் என்னும் சிறப்பும் பெற்றான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் உடைய பிராட்டியார் செம்பியன்மா தேவியார் உத்தமசோழ தேவர்க்கு நன்றாகத் திருக்கோயிலுக்கு வெள்ளிப்பாத்திரம்செய்து வைத்தார். செம்பியன்மா தேவியார் திருவாரூரா நெறியுடைய ஆழ்வார்க்குகற்கோயில் எடுப்பித்தார். (இந்தககல்வெட்டுக்கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்குவதால் முதல் இராஜராஜனுடையதாகலாம் என்று கருதப்படுகிறது) இவன் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து திருவாரூர் மூலத்தானமுடைய மகாதேவர்க்கு பன்னீரபிஷேகத்திற்கும், திருப்போனகத்திற்கும் ஆகக் கோயில்காரியம் பார்ப்பார்க்கு ஆணையிட்டான். அதுவன்றித் தன் தகப்பன் பிறந்த நாளிலும், தான் பிறந்த நாளினுமாக (அதாவது ஐப்பசி சதயம், ஆடி, ஆருத்ரா) திருவிழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்வித்தான்.

இராஜேந்திரன் 1

—கி. பி. 1012-1044.

இவன் முதல் இராஜராஜன் மகன். பரகேசரி இராஜேந்திரன் எனவும் வழங்கப் பெறுவான். இவனுக்கு மதுராந்தகன் முதலிய பல பெயர்கள் உள்ளன. வடநாடுகளையும் வென்று தமிழாற்றலை வடவரும் அறியச் செய்தவன். மகிபால மன்னன் தலையில் கங்கைக்குடம் கொண்டுவந்தவன். இவன் ஆட்சிபாண்டு இருபதில் தானும், அணுக்கியர் பரவை நங்கையாருமாகத் திருக்கோயிலுக்குப் பொன் வேயப் பெரும் பொன் அளித்துள்ளனர். இதே யாண்டில், இவன் அரசகாரியம் பார்ப்பவனான அருமொழிக் கூத்தனான லோகமாராயன் என்பான் முத்துமாலை, பவழமாலைகளும், வேறுபல மணிகளும் திருக்கோயிலுக்கு அளித்திருக்கிறான்.